கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் (டி1) துறை அரசாணை (நிலை எண்) 198 நாள் 15.03.95.

படிக்கப்பட்டது.

1. பள்ளி கல்வி இயக்குநரின் கடிதம் க.எ. 91323/டி1/94 நாள்: 23.11.94.

ஆணை

அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, அரசு நிதி உதவி பெற்று வரும் தனியார், ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள் விடுப்பில் செல்லும் போது பதிலி நியமணங்கள் குறித்து பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட மேலே படிக்கப்பட்ட அறிக்கையை அரசு நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது.

(1) அரசு உதவி பெறும் தனியார், ஆரம்ப நடுநிலை, உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் விடுப்பு பணியி .ங்களில் தற்போது பணியாற்றும் பதிலி நியமன ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அரசு மானியம் வழங்குவதை உடனடியாக நிறுத்துமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(2) அரசு நிதி உதவி பெறும் தனியார் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்கள் ஒருமாதம் மற்றும் அதற்கு மேல் விடுப்பில் சென்றால் அப்பணியிடங்களில் பதிலி ஆசிரியர் நியமனம் செய்தல் கூடாது.

(3) ஆனால் மகப்பேறு விடுப்பில் செல்லும் ஆசிரியை பணியிடங்களில் பதிலி ஆசிரியர் நியமனம் செய்து கொள்ளவும் அப்பணியிடங்களுக்கு மான்யமும் அனுமதிக்கலாம்.

(4) ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் சம்பளமில்லா விடுப்பில் (extra-ordinary leave without allowance) செல்லும் ஆசிரியர்களின் பணியிடங்களில் மட்டுமே விடுப்பு பதிலி ஆசிரியர்களை நியமித்து கொள்ளலாம்.

2. இவ்வாணைகள் வெளியிடப்படும் நாளிலிருந்து உடனடியாக அமலுக்கு வருகிறது.

3. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.க.எண். 115152/கல்வி/ 1.9.41 நாள் 1.2.95இல் அளிக்கப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

ஜெயந்தி

அரசு செயலாளர்.

(ஆளுநரின் ஆணைப்படி)